# கிருபையுள்ள வார்த்தை

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22


Vol - 20 | October அக்டோபர் | 2020

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-


# நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது

யாக்கோபு 5:16




கௌரவ ஆசிரியர் BETTY CHOATE ஆசிரியர் பிலேமோன் ராஜா


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 5 |
| வாலிபர் பகுதி | 7 |
| தனிநபர் வேத... | 8 |
| அடிப்படை வேத... | 10 |
| சிறுவர் பகுதி | 12 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**



ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா**, M.Th.,

**R. ஆண்டனி ராஜா**, D.Th.,M.B.A (Bible Studies)

**Dr. V.S. இம்மானுவேல்**, M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்**, B.Sc.,

**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L

அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### நம்பிக்கை T.V. யில்

**ஞாயிறு**

**மதியம் 3:30 மணி**

செய்தியாளர்

போதகர். **பிலேமோன்ராஜா**, M.A., M.Th.,

(Director - J.C. School of Evangelism)

### தமிழன் T.V. யில்

**ஞாயிறு காலை 7:00 மணி**

செய்தியாளர்

சகோ. **கிங்ஸ்லி ராஜா**, M.Th.,

(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**கிருபையுள்ள வார்த்தை**

**நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.**

### ஜாய் T.V. யில்

**சனி இரவு 9:00 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா**, M.A., M.Th.,

(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா**, M.Th.,

(இணை ஆசிரியர் -கிருபையுள்ள வார்த்தை)



**கிருபையுள்ள வார்த்தை**

**நம்மை ஜெபிக்க பழக்கும்**

**ஜெயபெலமானவரின் வார்த்தை**

**World Literature Publication**

Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only**

**and**

**receive**

**The Voice of Truth**

**International Vol. 103**

# ஜெபம் செய்திடுவோம்

ஆசிரியர் உரை

P.C. பிலேமோன் ராஜா



**அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் எனது அன்பின் வாழ்த்துக்கள்! இந்த மாதம் ஜெபத்தை பற்றிய ஒரு செய்தியை உங்களுடன் பகிர்ந்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.**

ஜெபம்என்பது மன்றாட்டு, விண்ணப்பம், வேண்டுதல், என பல வடிவங்களில் வேதாகமத்தில் விளக்கப்படுத்தப்பட்டுள்ளது. தூளும் சாம்பலுமான மனிதன் எல்லா வலிமையும், ஞானமும் நிறைந்த கடவுளிடம், பயபக்தியுடன் பேசுவதே ஜெபமாகும். **ஆதி 18:27** "அப்பொழுது ஆபிரகாம் பிரதியுத்தரமாக: இதோ, தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன் ஆண்டவரோடே பேசத்துணிந்தேன்." இங்கே சொல்லப்பட்ட துணிந்தேன் என்பது துணிகரமல்ல; தேவ கிருபையால் கிடைத்த துணிவை (தைரியத்தை) குறிக்கிறது. ஆயினும், இந்த கிருபையும் இரக்கமும் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. **ரோம 9:15** "அவர் மோசேயை நோக்கி: எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் இரக்கமாயிருப்பேன், எவன்மேல் உருக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் உருக்கமாயிருப்பேன் என்றார்."



இருப்பினும் கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்ட ஒவ்வொருவரும், ஒருவரும் சேரக்கூடாத தேவனுடைய கிருபாசனத்தண்டை சேரும் சிலாக்கியமும், தைரியமும் பெற்றிருக்கிறோம். **எபி 4:16,** "ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்."

**1. நாம் யாருக்காக ஜெபிக்க வேண்டும்? 1தீமோ 2:1** "நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் ஸ்தோத்திரங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்;" வேண்டியவர், வேண்டாதவர் என அனைத்து மனிதர்களுக்காகவும் நாம் ஜெபிக்க வேண்டும் என பைபிள் கூறுகிறது.

**2. மேலும், எதற்காக ஜெபிக்க வேண்டும்?** என வினவினால், **பிலி 4:6** "நீங்கள் ஒன்றுக்குங் கவலைபடாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை, ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்." சிறிய காரியம் பெரிய காரியம் என்ற பாகுபாடின்றி அனைத்திற்காகவும் ஜெபிக்க வேண்டும்.

**3. எங்கே ஜெபிக்க வேண்டும்? 1 தீமோ 2:8** "அன்றியும், புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன்." எங்கும் பிதாவை தொழுது கொள்ளும் காலம் இது என ஆண்டவர் இயேசு சொன்னார் **(யோவா 4:23,24).** ஏனெனில், பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது **(1கொரி 10:28).** ஆகையால், நாம் எல்லா இடங்களிலும் ஜெபிக்கும்படி பைபிள் நம்மை உற்சாகப்படுத்துகிறது.

**4. எப்பொழுது ஜெபிக்க வேண்டும்? லூக்கா 18:1** "சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்:" ஆண்டவர் இயேசு, சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபியுங்கள் என்கிறார். இன்பம், துன்பம், மகிழ்ச்சி, கண்ணீர், வியாதி, சுகம், பிரச்சனை, விடுதலை என அனைத்து நேரங்களிலும், சூழல்களிலும் ஜெபிக்கும்படி பைபிள் நம்மை உற்சாகப்படுத்துகிறது.

**5. ஏன் ஜெபிக்க வேண்டும்?** ஆண்டவர் இயேசு ஜெபித்தார் **(லூக்கா 5:16),** இன்றளவும் ஜெபித்துக்கொண்டே இருக்கின்றார் **(1யோவான் 2:1):** மேலும் நம்மை ஜெபிக்கச் சொன்னார் **(மத் 7:7–8):** அவருடைய நாமத்தினாலே ஜெபிக்கச் சொன்னார் **(யோவான் 16:23,24).** ஆவியானவரும் நமக்காக ஜெபிக்கிறார் **(ரோமர் 8:26,27),** நாம் ஒருவருக்கொருவர் ஜெபிக்கும்படியும் **(யாக் 5:16),** விசுவாசத்துடன் ஜெபிக்கும்படியும் **(யாக் 5:15),** கருத்தாய்

ஜெபிக்கும்படியும் **(யாக் 5:17)** வேதாகமம் நம்மை உற்சாகப்படுத்துகின்றது. ஆகையால் நாம் ஜெபிக்கின்றவர்களாக இருக்க வேண்டும்.

ஜெபத்தினால் என்ன நடந்தது? பைபிளிலிருந்து சில உதாரணங்களை பார்க்கலாம், இயேசு ஜெபித்த போது, பரலோகம் திறந்தது, தேவன் பேசினார், ஆவியானவர் இறங்கி வந்தார் **(லூக்கா 3:20−22).** இன்றைக்கும் நாம் ஜெபிக்கும் போது பரலோகத்தின் தேவன் தனது காதுகளை திறந்து வைத்து ஆவலுடன் கேட்கிறார். **1 பேதுரு 3:12** "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீ மைசெய்கிறவர்களுக்கோக ர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது."

அப்போஸ்தலர்கள் மற்றும் சபையார் ஜெபித்த போது பூமி அதிர்ந்து **(அப் 4:24−36).** இன்றும் நாம் ஜெபிக்கும் போது தேவன் நமக்காக பூமியில் உள்ள மனிதர்களை அசைத்து, நமக்காக செயல்பட வைக்கிறார். இயேசு கெத்சமனேயில் ஜெபித்தார், பிலாத்துவின் மனைவி தூக்கம் கெட்டு, "நீதிமானாகிய இயேசுவை ஒன்றும் செய்ய வேண்டாம்" அவருக்காக பரிந்து பேசினாள் **(மத் 27:19).** யாக்கோபு ஜெபித்தான் அவனுக்கு தீங்கு செய்யாதபடி தேவன் லாபானையும், ஏசாவையும் மாற்றினார்.

இயேசு ஜெபித்தார் சோதனைகளை ஜெயித்தார் **(மத்தேயு 26:39−44)** அவர் சந்திக்க வேண்டிய மிகப்பெரிய வாழ்வின் போராட்டங்கள், துன்பங்கள், அவமானங்கள் மற்றும் மரணத்தினை மேற்கொள்ள பெலத்தை பெற்றுக்கொண்டார். **மத்தேயு 26:45−46** "பின்பு அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் வந்து: இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்; இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற வேளை வந்தது. என்னைக் காட்டிக் கொடுக்கிறவன், இதோ, வந்துவிட்டான், எழுந்திருங்கள், போவோம் என்றார்."

இன்னும் நிறைய சொல்லிக்கொண்டே போகலாம். இரட்சிக்கப்பட்ட ஒருவர் ஜெபிப்பதினால் அவருக்கும் கடவுளுக்குமான உறவில் இன்னும் நெருக்கமாகின்றார். அந்த நபர் செய்த பாவத்திற்கான தண்டனையிலிருந்து காப்பாற்ற மனம்மாறுகிறார். ஜெபிக்கின்ற நபரும் தனது ஒழுங்கினமான காரியங்களை விட்டு வெளியே வந்து, மனந்திரும்பி அதற்கேற்ற கனிதருகின்றவராகின்றார். **1 யோவான் 1:7−9** "அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்."



இறுதியாக, நமது ஆண்டவர் இயேசு பூமியில் மனிதனாக வாழ்ந்த நாட்களில் அதிகமாக ஜெபிக்கிறவராக இருந்தார். அது பாடுகளை ஜெயிக்கவும், தாழ்மையுடன் பிதாவிற்கு கீழ்படியவும், அவரை பூரணராக்கவும், அநேகருக்கு இரட்சிப்பை வழங்கி அவர்களையும் பூரணாக்கவும், தேவனாலே உயர்த்தபடவும் செய்தது. **எபி 5:7−10** அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு, அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி, மெல்கிதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார். நாமும் ஜெயிக்கிறவர்களாக இருக்கும் பட்சத்தில், பரலோக தேவனாலே ஜெயிக்கிறவர்களாக இருப்பபோம். ஆகையால் தினமும் 3 முறை, 5 முறை, 7 முறை என உங்கள் வசதிற்கு ஏற்ப திட்டமிட்டு, நேரம் ஒதுக்கி ஜெபத்தினால் தேவனை தேடி, அவரோடு உறவாடி ஐக்கியம்கொள்வோம். இந்த தெய்வீக முயற்சியில் நாம் வெற்றிக்கொள்ள தேவன் உதவுவராக. ஆமென்!

# கானானிய பெண்

பெண்கள் பகுதி
சகோதரி : பேபி ராஜா



அன்பார்ந்த சகோதரிகள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு எனது அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாதம் கானானிய பெண்ணை பற்றி உங்களுடன் பகிர்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

சீரோபேனிக்கா தேசத்தை சேர்ந்த கிரேக்க பெண் ஒருத்தி, தனது மகள் பிசாசினால் கொடிய வேதனைப்பட்டதால் . ஆண்டவரின் சுகமளிக்கும் வல்லமையை அறிந்து அவரிடம் உதவி கேட்டுவந்தால், நீண்ட தொடர் வேண்டுதலுக்கு பின்னே, "பெண்ணே உன் விசுவாசம் பெரிது, நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது" என்ற பாராட்டை பெற்று, அவர் வேண்டியதை பெற்றுக்கொண்டாள் என்பது நாம் அறிந்ததே. இந்த வரலாற்று பதிவு **மத்தேயு 15:22–28** மற்றும் **மாற்கு 7:26–30** ஆகிய நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவத்திலிருந்து ஜெபத்தை பற்றிய காரியத்தை நாம் அறிந்துக்கொள்வோம்.

### 1. வேதனையின் விளிம்பில் ஜெபித்தால்

**மத்தேயு 15:22** "அப்பொழுது, அந்தத் திசைகளில் குடியிருக்கிற கானானிய ஸ்திரீ ஒருத்தி அவரிடத்தில் வந்து; ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்று சொல்லிக் கூப்பிட்டாள்."

உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன் **(யாக் 5:13)** என வேத வசனம் நம்மை உற்சாகப்படுத்துகிறது. ஆபத்து காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு என தேவனும் சொல்கிறார் **(சங் 50:15).** ஏனெனில் தேவன் நமது ஆபத்துகாலத்தில் நமக்கு துணையாக இருக்கிறார் **(சங் 461).** நமக்கு துன்பங்கள் வரும்போது நாம் தேவனை நோக்கி ஜெபிப்போம்.

### 2. உடனே பதில் வராதபோதும் உறுதியாக ஜெபித்தாள்

**மத்தேயு 15:23** "அவளுக்குப் பிரதியுத்தரமாக அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து: இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள்."

ஆண்டவர் அவளுக்கு பதில் சொல்லவில்லை, ஆனாலும் அவள் கேட்பதை விடவில்லை. நாமும் தேவனிடம் ஜெபிக்கின்ற காரியத்தில் சோர்ந்து போகாமல் ஜெபிக்கின்றவர்களாக இருக்க வேண்டும் **(லூக்கா 18:1).** ஏனெனில் தேவன் நீதுயுள்ள நியாயதிபதி நிச்சயம் நீதி செய்வார் **(லூக்கா 18:7–8).**

### 3. தவிர்க்கப்பட்ட போதும் தளராது ஜெபித்தாள்

**மத்தேயு 15:24–25** "அதற்கு அவர் : காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல வென்றார். அவள் வந்து; ஆண்டவரே, எனக்கு உதவி செய்யும் என்று அவரைப் பணிந்து கொண்டாள்."

ஆண்டவர் அவளை தவிர்க்கிறார், ஆனாலும் அவள் விடவில்லை, அவளை அவர் தவிர்க்க தவிர்க்க இன்னும் அவள் ஆண்டவரை நெருங்கி வருகிறாள். என்ன ஒரு அன்பு மற்றும் விசுவாசம் பாருங்கள். தொடர்ந்து விசுவாசத்துடன் ஜெபிக்கின்ற காரியத்தில் நாம் எப்படி? என்பதை யோசித்துப் பார்ப்போம் **(2கொரி 13:5).**

### 4. அவமதிப்புற்ற நிலையிலும் அசராது ஜெபித்தாள்

மத்தேயு 15;26-27 "அவர் அவளை நோக்கி: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார். அதற்கு அவள் : மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள்."

இது அவளிடம் கற்றுக்கொள்ள வேண்டிய இன்னொரு முக்கியமான காரியமாகும். நீயும் தான் 15 வருசமாக, 10 வருசமாக ஜெபித்துக்கிட்டு தான் இருக்கிற, தவறாமல் சபைக்கு போற ஒன்னும் நடக்கவில்லை. ஒரு முன்னேற்றமும் இல்லை என ஜெபிக்கின்ற நம்மை யாராவது அவமானப்படுத்துகிறார்கள் என்றால், நாம் என்ன செய்கிறோம்? தளர்ந்து தள்ளாடி ஜெபிக்கின்றதை, ஆண்டவரை தேடுகின்றதை விட்டுவிடுகிறோமா?

இல்லை தொடர்ந்து அவரை பிடித்துக் கொண்டிருக்கின்றோமா?

### 5. வேண்டியதை பெறும் வரை விசுவாசத்துடன் ஜெபித்தாள்.

**மத்தேயு 15:28** “இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக; ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆககடவது என்றார். அந்நேரமே அவன் மகள் ஆரோக்கியமானாள்.”

அவளுடைய விசுவாசத்தை கண்டு பிரமித்த ஆண்டவர். அவள் வேண்டியதை மாத்திரமல்ல, அவள் விரும்பியதை அவள் வாழ்வில் கொடுத்தார். இது தான் நம் தேவன் நாம் அவரை உறுதியாக பிடித்துக்கொண்டால். அவர் இறுதிவரை நம்மை விடவே மாட்டார் **(மத் 28:20, ஏசா 41:10).** ஆகையால் நாம் அவரை தொடர்ந்து பிடித்துக்கொள்வோம்.

அன்பான சகோதரிகளே நாம் எப்படி ஜெபிக்கிறோம்? ஜெபம் என்பது நம் வாழ்வில் எப்படிபட்டதாயிருக்கிறது? அதை பழக்கம் என்பதால் செய்கின்றோமா? ஜெபிக்காவிடில் இந்த நாள் உருப்படாது என்ற பயத்தால் ஜெபிக்கின்றோமா? அல்லது இந்த கிரேக்க பெண்ணை போல விசுவாசத்துடன் பரலோக தேவனை உறுதியாக பிடித்துக்கொண்டு அசராது ஜெபிக்கின்றோமா? என்பதை சற்றே சிந்திப்போம். இந்த பெண்ணை போல நமது ஜெபமும் தேவனுக்கு முன்பாக உகந்ததாக இருக்கும்படி ஜெபிப்போம். நாம் விசுவாசத்துடன் ஜெபிப்பதை அவர் சித்தப்படி நமக்கு தந்து நம்மையும், நம் குடும்பங்களையும் சபை மக்களையும் நம் தேசத்தையும் ஆசீர்வதிப்பாராக! ஜெபத்துடன் உங்கள் சகோதரி.

பொதுவான செய்திகள்

## இலக்கிய பெயர்கள்

உலகில் ஏறக்குறைய 6500 மொழிகள் உள்ளன. பெரும்பான்மையான முதல் 10 மொழிகளில் தமிழ் முதன்மையானது, தமிழ் மொழி உலகின் மூத்த மொழிகளில் தொன்மையானது, இலக்கியங்களில் சொல்லப்பட்ட ஊரின் பெயர்களுக்கும் இப்பொழுது வழக்கத்தில் உள்ள பெயர்களுக்கும் பெரிய வித்தியாசங்கள் உள்ளது. வனங்களை அழித்து உண்டாக்க பட்ட ஊர்கள் இவை திண்டிவனம், தில்லை வனம். கடம்பவனம் (மதுரை) மூங்கில்வனம் (நெல்லை) கடம்பவனம் காடுகளை அழித்து உருவாக்கப்பட்டது மதுரை என சங்க இலக்கியங்கள் கூறுகின்றன, மருதை துறை என்ற ஊரை மதுரை என மருவிவந்துள்ளது.

தமிழர்கள் ஐந்தினை வாழ்க்கை முறையை கொண்டவர்கள் ஆகையால் இயற்கையை சார்ந்த பெயர்கள் இங்கே வழங்கப்பட்டன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என அழைத்தார்கள். பின்பு சமயங்கள் வந்தது அதற்கேற்பாற் போல் பெயர்கள் மாற்றப்பட்டன. பின்பு மன்னர்கள், மகான்கள் வந்தனர் அதற்கேற்பாற் போல் பெயர்கள் மாற்றப்பட்டன. ஆசிரியர், இஸ்லாமியர், ஆங்கிலேயர் என அநேகர் படையெடுத்து வந்தனர்.

இறுதியில் தலைவர்கள் பெயர் வைக்கப்பட்டன காந்திநகர், காமராஜர் நகர், அம்பேத்கார் நகர், பெரியார் நகர், அண்ணா நகர், ராஜீவ்காந்தி நகர், ஆபுசு நகர், கலைஞர் நகர், ஜெயலலிதா நகர் என பெயர்கள் மாற்றமடைந்து வந்துள்ளன.

சில உதாரணங்கள் (இலக்கிய பெயர்கள் – இன்றைய பெயர்கள்)

| | | |
|---|---|---|
| இடையர் பாடி – எடப்பாடி | = | முகவை – இராமநாதபுரம் |
| வில்முனை – தனுஷ்கோடி | = | பொழில் ஆட்சி – பொள்ளாச்சி |
| செவ்வேங்கை – சிவகங்கை | = | வானவன் மருதை துரை – மானாமதுரை |
| காளப் பேரயல் – காளையார்கோயில் | = | ஆரூர் – திருவாரூர் |
| வற்றாத ஆறு இருப்பு – வத்திராயிருப்பு | = | ஊடுமலை பேட்டை – உடுமலைபேட்டை |
| ஈர ஓடு – ஈரோடு | = | உகிநீர்க்கல் – ஒக்கனேக்கல் |
| தகடூர் – தருமபுரி | = | ஐயாறு – திருவையாறு |
| கயல்பாக்கம் – கல்பாக்கம் | = | சேரளம் – சேலம் |
| திருத்தணிகை – திருத்தணி | = | அண்ணாமலை – திருவண்ணாமலை |

– தேர்ந்தெடுக்கப்பட்டது (News 18 தொலைக்காட்சி 11/6/20)

# இயேசுவின் ஜெபம்

சகோ. ஜோசப் பிரதீப்

அன்பான வாலிப தம்பி தங்கைகளுக்கு ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாதம் ஆண்டவர் இயேசுவின் ஜெபத்தை பற்றி உங்களுடன் பகிர்ந்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆண்டவர் இயேசு இந்த பூமியில் வாழ்ந்த நாட்களில் பிதாவை நோக்கி அதிகமாக ஜெபிக்கிறவராக இருந்தார். அதிகாலை, மாலை, இரவு முழுவதும் போன்ற நேரங்களில் ஜெபித்தார். தான் செய்கின்ற ஒவ்வொரு வேலையிலும் சர்வவல்லமையுள்ள கடவுளை முன்னிலைப்படுத்தி, தன்னை தாழ்த்தி ஜெபிக்கிறவராக இருந்தார்.

இயேசு தான் மனுக்குலத்தின் பாவத்திற்காக மரித்தே ஆகவேண்டிய தேவ சித்தத்தை நிறைவேற்றும் வேளை வந்த போது, அந்த மரணத்தை தாழ்மையோடு ஏற்றுக்கொண்டார். அந்த துக்க தருவாயிலும், அது தான் சாகப்போகிறோமே என சாதாரணமாக இருந்துவிடாமல், ஜெபிப்பதை சாதாரணமாகவும் எடுத்துக்கொள்ளாமல், ஊக்கத்துடனும், தாழ்மையுடனும் ஜெபித்தார் **(மத் 26:39–46).**

நாமும் நமது ஆண்டவரை போல ஊக்கத்துடனும், தாழ்மையுடன் தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து ஜெபிப்போம். நாமாகவே கிடைக்காது, நடக்காது என்ற முன் அனுமானதத்தினால் இருமனதுடன் தேவனிடம் ஜெபிப்பதைவிட, ஒரு மனதாக விசுவாசத்துடன் ஜெபிப்போம். **யாக் 1:5–8** “உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பனாக. இருமனமுள்ளவன் தன் வழிகளிளெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்.

ஜெபம் வெற்றியடைய தாழ்மை தேவை. தாழ்மையோடு செய்யப்படுகின்ற ஜெபங்கள் தேவனால் அங்கரீக்கப்படுகின்றன. ஏனெனில் நாம் ஜெபிக்கும் ஜெபத்தில் இணைகின்ற இன்னொருவர் சர்வத்தையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற சர்வவல்லமையுள்ள தேவன், ஆகையால் தாழ்மையுடன் ஜெபிப்போம். **லூக்கா 18:13–14–** ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான், தன்னை தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.

ஜெபம் வெற்றியடைய தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தல் தேவை **1 யோவான் 5:14** “நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்.” நம்முடைய விருபங்களை தேவனிடம் திணிக்க வேண்டாம். எந்த விஷயத்திலும் தேவனிடம் பிடிவாதம் பிடிக்க வேண்டாம். ஏனெனில் நாம் விரும்புவதைவிட நம் நன்கு உணர்ந்து, விசுவாசித்தபடியினால் தான், தேவசித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து ஜெபித்தார். நாமும் அவ்வாறே செய்வோம்.

தொடர் 29

# 1 யோவான்: நித்திய ஜீவனின் உறுதிப்பாடு

சகோ. ஜோசப் பிரதீப்

## தலைப்பு

யோவானின் முதல் நிருபம் இதை எழுதிய அப்போஸ்தலரான யோவானுடைய பெயரைக் கொண்டு அழைக்கப்படுகிறது. அவர் இப்புத்தகத்தில் தம்மை அடையாளப்படுத்திக்கொள்வதில்லை, ஆனால் தேவனுடைய இரண்டு சீஷர்களான போலிகார்ப்பும் பாப்பியஸும், இந்தப் புத்தகம் அவரால் எழுதப்பட்டதென்று குறிப்பிட்டு இதிலிருந்து மேற்கோள் காண்பித்துள்ளனர்.

## பின்னணி

யோவான் அனேகமாக தமது சுவிசேஷ விவரத்தை எழுதி முடித்த பின்பு 1,2,3 யோவான் நிருபங்களை எழுதியிருக்கலாம். அவர் கிறிஸ்துவின் மீது விசுவாசத்தை ஏற்படுத்த (அல்லது பலப்படுத்த), இயேசுவின் வாழ்வைப் பற்றி எழுதினார் (யோவான் 20:31). அவர் விசுவாசிகள் பூரணத்தன்மைக்கு (அல்லது பக்குவத்திற்கு) கடந்து செல்ல உதவுவதற்காக, அதாவது அவர்களின் சந்தோஷம் “பூரணப்படுவதற்காக” (1:4; 5:13) 1 யோவான் நிருபத்தை எழுதினார்.

யோவானின் சுவிசேஷத்தில் “விசுவாசித்தல்” என்பது - திறவுகோல் வார்த்தையாக உள்ளது; 1 யோவானில் திறவுகோல் வார்த்தையாக உள்ளது, ‘‘அறிதல்’’ என்பதாகும். ‘‘அறிதல்’’ என்பதும் அதிலிருந்து தொடங்கும் மற்ற வார்த்தைகளும் முப்பது முதல் நாற்பது தடவைகள் இப்புத்தகத்தில் காணப்படுகின்றன. நிச்சயமான உறுதித்தன்மை என்பதின் மேல் வலியுறுத்தம் உள்ளது.

“அறிதல்” என்ற வார்த்தையை யோவான் தொடர்ந்து பயன்படுத்துதலதனது, வார்த்தைகளின் மீது விளையாட்டாக உள்ளது. ‘‘அறிதல்’’ என்பதற்கான கிரேக்க வார்த்தை gnosis என்பதாகும், மற்றும் யோவான் தமது நாட்களில் இருந்த அறிவுச்சார்பியத்திற்கு எதிராக யுத்தம் செய்கின்றார். அறிவு சார்பியத்தைக் கொண்டிருந்தவர்கள், விசேஷித்த அறிவைக் கொண்டிருந்ததாக உரிமைகோரினார் (யோவான் மற்றும் கொலோசெயருக்கு எழுதிய நிருபம் ஆகியவற்றிற்கான குறிப்புகளைக் காணவும்).

அறிவுசார்பியக் கொள்கையாளர்களில் பல வகையினர் இருந்தனர், ஆனால் அவர்கள் யாவருமே கருப்பொருளைத் துன்மார்க்கமானது என்று நினைத்தனர். இது அவர்களுக்கு (இயேசுவின்) திரு அவதாரம் பற்றி வினோதமான கண்ணோட்டத்தைதக் கொடுத்தது. ஒரு குழுவானது. கிறிஸ்து இயேசு என்ற மனிதரைக் கட்டுப்படுத்துபவராக மாத்திரம் இருந்தார் மற்றும் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு அவரை விட்டுப் பிரிந்தார் என்று நம்பியது. இன்னொரு குழுவானது, கிறிஸ்து ஒரு மாயத்தோற்றமான உடலைக் கொண்டிருந்தார், அவர் பாடுபடுவதாகத் தோற்றம் மாத்திரம் அளித்தார் என்று கூறியது, யோவான் சுவிசேஷத்தில் போன்றே **1 யோவான்** நிருபத்திலும், கிறிஸ்து மாம்சத்தில் வந்தார் என்பதை இந்த அப்போஸ்தலர் வலியுறுத்துகின்றார் **(4:2, 3; 2 யோவான் 7 ஐக் காணவும்).**

கருப்பொருள் துன்மார்க்கமானது / சரீரம் பொல்லாதது என்ற கண்ணோட்டம், இந்தக் கள்ளப்போதகர்களுக்குப் பாவம் பற்றியும் ஒரு வினோதமான கண்ணோட்டத்தைக் கொடுத்தது, சிலர், தங்கள் வாழ்வில் உடலுக்கு சந்தோஷம் அளிக்கக்கூடிய எதையும் நீக்கிப்போட முயற்சித்தல் என்ற ஒரு முனைப் பகுதி வரைக்கும் சென்றனர் **(கொலொசெயர் 2:21 ஐக் கவனிக்கவும்).** இருப்பினும், பெரும்பான்மையானவர்கள் இதற்கு நேர் எதிரான முனைப் பகுதிகளுக்குச் சென்றனர், அவர்கள் மாம்சத்தின் செயல்கள் எதுவும் ஆத்துமாவைப் பாதிப்பதில்லை என்று கூறினார். இவ்விதமாக யோவான், தேவனுக்குக் கீழ்ப்படிதல் (2:4) மற்றும் தேவ பக்தியுள்ள வாழ்க்கையை வாழுதல்

ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார் (3:10).

இது வயது முதிர்ந்த கிறிஸ்தவர், ஆவிக்குரிய வகையில் தமது பிள்ளைகளாய் இருந்தவர்களுக்கு எழுதிய வலிவார்ந்த கடிதம் ஆகும். இது அன்பினால் நிறைந்துள்ள புத்தகமாகும் (இவ்வார்த்தை இதன் ஐந்து அதிகாரங்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது), ஆனால் இது மிகவும் நேரடியான புத்தகமாகவும் உள்ளது. இது ஆசியாவில் இருந்த சபைகளில் சுற்றுக்கு விடப்படுதலை நோக்கங்கொண்டு இருந்திருக்கலாம். இது அனேகமாக எபேசு நகரில் இருந்து எழுதப்பட்டிருக்கலாம்; கி.பி. 90 என்பது, இதை எழுதிய காலமாகும் (யோவான் சுவிசேஷத்திற்கான குறிப்புகளைக் காணவும்). இந்த புத்தகத்தில் யோவான், உபத்திரவத்தின்கீழ் சகிப்புத்தன்மையுடன் இருதலைப்பற்றிக் குறிப்பிடுவதில்லையாதலால், இது அனேகமாக, கி.பி. 94 - 95 ல் டொமீஷியனின்கீழ் உபத்திரவம் தொடங்குவதற்குச் சற்றே முன்னதாக நிலவிய சமாதானமான காலகட்டத்தில் எழுதப்பட்டிருக்கலாம்

## வரைகுறிப்புகள்

நித்திய ஜீவனின் உறுதிப்பாடு (5:13) அறிமுகம் (1:1-4).

### I. ஒளியில் நடப்பதன்மூலம் உறுதிப்பாடு [1:5 2:29].

A. தேவன் ஒளியாய் இருக்கின்றார் (1:5-7; 2:8-11 ஐக் காணவும்).

B. பின்வருபவற்றின்மீது வலியுறுத்தம்:

1. கட்டளைகள் (2:3-8).

2. பாராட்டுரைகள் (2:12-14).

### II. அன்பில் நிலைதிருப்பதன்மூலம் உறுதிப்பாடு [3;4].

A. நடைமுறை அன்பு (3:11 முதல்).

B. பூரணமான அன்பு (4:7 முதல்); தேவனுடைய அன்பு (4:8, 16).

### III. விசுவாசத்தைச் செயல்படுத்துதல் மூலம் உறுதிப்பாடு [5:1-12].

### 1. யோவான் நிருபத்தில் இருந்து பாடங்கள்

தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில், நாம் ஒருக்காலும் மனநிறைவடைபவர்கள் ஆகக்கூடாது **(1 கொரிந்தியர் 10:12).** ஆனால் நாம் நமது சுயத்தில் அல்ல, ஆனால் தேவனுடைய கிருபையில் அமைதியான நம்பிக்கையினால் பண்புபடுத்தப்பட வேண்டும். பவுல்,"இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது,... கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்" என்று கூறினார் **(2தீமோத்தேயு 4:8).**

"...நாமும் ஒளியிலே நடந்தால்... இயேசு கிறிஸ்துவின் இரத்தம்...சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" (1:7) என்று அறிந்திருப்பதில் நாம் தைரியம் கொண்டிருக்க முடியும். "ஒளியில் நடத்தல்" என்பது குறைவின்றி மற்றும் பரிபூரணமாக வாழுதல் என்று அர்த்தப்படுவதில்லை (அப்படி அர்த்தப்படுமென்றால், நம்மிடத்தில் சுத்திகரிப்பதற்குப் பாவம் எதுவும் இராது). மாறாக, அது கர்த்தருக்குச் கீழ்ப்படுவதில் அமைந்திருக்கும் இருதயத்தின் விளைவான, ஒரு வாழ்க்கை முறையைக் குறிக்கிறது.

மனச்சான்று மென்மையாக இருந்தால், சில வேளைகளில் நாம் குற்றம் பற்றி உணர்வடைவோம், ஆனால் விதிப்படி, தேவன் தமக்கு முக்பாக நாம் தைரியம் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்புகின்றார் (வசனம் 21). அவரைப் பிரியப்படுத்துவதே நமது விருப்பமாய் இருக்கிறது என்றால், "(கிருபையும் இரக்கமும் நிறைந்துள்ளன) தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராய் இருக்கிறார்'' (3:20) என்பதை நினைவில் வை/த்திருத்தல் முக்கியமானதாக உள்ளது. பரலோகத்திற்குச் செல்லும் பயணத்தை நாம் மகிழ்ச்சியுடன் அனுபவிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்!

# பாடம் : 8- இயேசு கிறிஸ்துவே ஜீவனுள்ள தேவனுடைய குமாரனென்று கிறிஸ்தவர்கள் ஏன் விசுவாசிக்கிறார்கள் ?

**தொடர்ச்சி**

"அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்பட வேண்டுமென்று அகுஸ்துராயனால் கட்டளை பிறந்தது. சீரியா நாட்டிலே சிரேனியு என்பவன் தேசாதிபதியாயிருந்தபோது இந்த முதலாம் குடி மதிப்பு உண்டாயிற்று. அந்தப்படி குடி மதிப்பெழுதப்படும்படிக்கு எல்லாரும் தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போனார்கள். அப்பொழுது யோசேப்பும், தான் தாவீதின் வம்சமத்தானும் குடும்பத்தானுமாயிருந்தபடியினாலே, தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டு கர்பவதியான மரியாளுடனே குடிமதிப்பெழுதும்படி. கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப்போனான்.

அவ்விடத்திலே அவர்கள் இருக்கையில், அவளுக்குப் பிரசவ காலம் நேரிட்டது.

அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்த படியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடத்தினாள் **( லூக்கா 2:1–7 ).**

"பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணவேண்டிய எட்டாம் நாளிலே, அது கர்ப்பத்திலே உற்பவிக்கிறதற்கு முன்னே தேவ தூதனால் சொல்லப்பட்டபடியே, அதற்கு இயேசு என்று பேரிட்டார்கள்" **(லூக்கா 2:21 ).**

உலகில் எங்குமுள்ள கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்து மனிதனை விட உயர்ந்தவர் என்றும், ஒரு தீர்க்கதரிசியை விட உயர்ந்தவர் என்றும் உண்மையிலேயே அவரே நித்திய தேவனின் ஒரேபேரான குமாரனென்று, தங்கள் முழு இருதயத்துடன் விசுவாசித்து; இதுவே சத்தியமென ஏற்றுக்கொண்டு நம்புகிறார்கள். மத்தேயுவும், லூக்காவும் கூறியுள்ளவைகளை நாம் ஏற்கனவே கண்டோம். அவர் (இயேசு), மரியாள் வேறு ஒரு மனிதனுடன் கொண்ட உறவால் பிறந்தவர் அல்ல. உன்னதமானவரின் பலம் அவள்மேல் நிழலிட்டதன் காரணமாக அவர் இவ்வுலகில் வந்து உதித்த **(லூக்கா1:35)** இது எப்படி சாத்தியமாகும் என்ற வினாவை யாராவது எழுப்பக்கூடும். சாராள் 90 வயதுள்ள வளாயிருக்கையில் அவளுக்கு ஒரு குழந்தை பிறக்கப்போகிறதென கூறப்பட்டபோது அவள் நகைத்தாள். அதுபற்றி தேவன் ஆபிரகாமுக்குக்கூறிய வார்த்தைகள் இங்கு கவனிக்கத்தக்கது தேவன் கூறினார்.

"கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? உற்பவ காலத்திட்டத்தில் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்; அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான்." **(ஆதியாகமம் 18:19).**

வானங்களையும், பூமியையும், மற்றும் எல்லாவற்றையும் படைத்த தேவனுக்கு, தன் சந்ததியை, ஒரு கன்னியின் கர்ப்பத்தில் வைப்பது அசாத்தியமல்ல. மரியாளையும் படைத்தது அவர் தானே ! (முதலில் ஏவாளை அவர் படைத்தார். அவள் மூலம் உற்பத்தியானவளே மரியாள்). நிச்சயமான அந்த மரியாள் இப்படியாக மனிதக் கலப்பில்லாமல் கர்ப்பம் தரிக்கச் செய்யவும் அவரால் ஆகும். இதைத் தன்னுடைய பலத்தால் செய்தாரேயன்றி மனித பலத்தால் அல்ல.

வேறு விதமாக வாதிப்பது, தேவனுடைய பலத்தைக் கட்டுப்படுத்த முயற்சிப்பதாகும். ஆனால் இயேசு கிறிஸ்துவே கூறியுள்ளபடி "மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும்". **( லூக்கா 18–27 ).**

இயேசுவானவரே தேவன் என்ற உண்மைக்கு சாதாரணக் கூற்றுகள் மட்டுமே சாட்சியமாக இல்லை. அவரே தேவன் என்று கூறுவது ஒரு விஷயம். ஆனால் அவரே தேவன் என்பதை நிரூபிப்பது மற்றொரு விஷயம். கிறிஸ்தவர்களின் விசுவாசத்திற்கு அடிப்படையான மற்ற சாட்சியங்களும் வேதத்தில் உண்டு. அவை யாவை?

## II. நிறைவேறியுள்ள தீர்க்கதரிசனங்கள் இயேசுவானவரே தேவனுடைய குமாரனென்று நிரூபிக்கின்றன.

A. இயேசு கிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என்பது உண்மை :-

1. தேவ தூதன் காபிரியேலினால் கூறப்பட்டது. இதை ஏற்கனவே கூறியுள்ளோம் **( லூக்கா 1:32–35).**

2. இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபோது " வானத்திலிருந்து ஒரு சத்தம் " கூறியது **(மத்தேயு 3:13–7:மாற்கு 1:11 : லூக்கா 3:1–22 ).**

3. "மேகத்திலிருந்து ஒரு சத்தம்" (இயேசு மறுரூபமான போது) கூறியது. **மத்தேயு 17:1–8 ; மாற்கு 9:2–8 ; லூக்கா 9:28–36.**

4. இயேசுவாலேயே கூறப்பட்டது. **மத்தேயு 11:25–27 ; யோவான் 5:17–25 ; 9:30–38; 10:24 38; மத்தேயு 26:63–64; மாற்கு 14:60–62; லூக்கா 22:65–71.**

5. பிசாசுகளினால் கூறப்பட்டது. **லூக்கா 4:40 41: மத்தேயு 8:28–34 : லூக்கா 8:26–40 : மாற்கு 5:1–20.**

6. இயேசுவானவரின் சீசர்களினால் கூறப்பட்டது. **மத்தேயு 14:22–33.**

7. யோவான் ஸ்நானகனால் கூறப்பட்டது. **யோவான் 1:15–18 : 1:29–34.**

8. நாத்தான்வேலினால் கூறப்பட்டது. **யோவான் 1:45–51.**

9. பேதுருவினால் கூறப்பட்டது. **மத்தேயு 16:13 20: யோவான் 6:66–69.**

10. இயேசு சிலுவையில் அறையப்பட்ட பிறகு, காவல் இருந்த ரோம் அதிகாரியினாலும் (நூற்றுக்கதிபதி) அவனுடன் கூட இருந்த மற்றவர்களாலும் கூறப்பட்டது. **மத்தேயு 27:45–54.**

**கவனி**

உண்மையிலேயே இந்தப்படியாக தானே தேவனுடைய குமாரனென்று கூறியதற்கே, இயேசு சிலுவையில் அடிக்கப்பட்டார் ! அவரில் ஒரு குற்றமும் காணாத காரணத்தால் அவரை விடுதலையாக்க பிலாத்து (ரோம அதிபதி) தீர்மானித்தான். **(யோவான் 18:28–40).** இயேசு அல்லது பரபாஸ் என்ற கொள்ளைக்காரன் இவர்களின் ஒரு வரை பெற்றுக்கொள்ளவும் யூதர்களுக்கு பிலாத் ஒரு சந்தர்ப்பம் கொடுத்தான். அவர்களோ பரபாஸை விடுதலையாகப் பெற்றுக்கொண்டு இயேசு சிலுவையில் அறையப்பட வேண்டினார்கள். அவர்கள் கூறினார்கள் : (1) "எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு. இவன் தன்னை தேவனுடைய குமாரனென்று சொன்ன படியினால், அந்த நியாயப்பிரமாணத்தின் படியே, இவன் சாக வேண்டும்" **(யோவான் 19:1–7 : மத்தேயு 27:11–43 காண்க)** இயேசு தான் தேவனுடைய குமாரனென்று எப்போதுமே கூறியது கிடையாது என்று மறுப்போருமுண்டு. அப்படியாயின் அவர் சிலுவையில் அறையப்பட காரணமென்ன ? வேறு காரணமெதுவும் கூறப்படவில்லையே.

## B. இயேசு கிறிஸ்துவை நாம் நம்புவதற்கு காரணமான நிறைவேறியுள்ள தீர்க்கதரிசனங்கள் 38 உண்டு.

ஒரு பொய்யை மனிதர் விசுவாசிக்க வேண்டுமென்று தேவன், தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுவாரென்று நாம் கொள்வது சாத்தியமல்ல. ஒன்று இயேசு தான் யாரென்று கூறினாரோ அவராகவே இருக்கவேண்டும். அல்லது உலகில் உலாவியுள்ள எல்லா மனிதரிலும் பெரிய ஏமாற்றுக்காரனாக இருக்க வேண்டும். பழைய ஏற்பாட்டில் காணப்படும் கீழ்க்கண்ட தீர்க்கதரிசனங்களை ஆராய்ந்து பார்க்கவும். புதிய ஏற்பாட்டில் அவை நிறைவேற்றியுள்ளதையும் காண்க. இயேசு அவதரிப்பதற்கு நாலரை நூற்றாண்டகளுக்கு முன்பே, பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகம் எழுதப்பட்டு விட்ட காரணத்தால் இந்த தீர்க்கதரிசனங்கள் எல்லாமே இயேசு பிறப்பதற்கு சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்னமேயே உரைக்கப்பட்டவை ஆகும். சில 600, 800, 1000, 1700, வருடங்கள் பழமையானவை. இவையெல்லாம் நிறைவேறியுள்ளன. இது இப்படியிருக்க தீர்க்கதரிசனம் உரைத்தோர் அதன் நிறைவேறுதலை எவ்விதத்திலும் சாத்திய மாக்குவது முடியாத காரியமாகிறது.


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : *92 4421 4421 & 92 4431 4431*) **Nambikai TV :** *Every Sunday 3.30 p.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana TV :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.


# சபையாரின் ஜெபம்

சிறுவர் பகுதி

கடவுளுக்கு பிரியமான அன்பு பிள்ளைகளா! உங்கள் அனைவரையும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் நான் வாழ்த்துகிறேன்.

இந்த நாளில் கூட பேதுருக்காகாக சபையார் ஊக்கமாக ஜெபித்ததினால், என்ன நடந்தது என்பதைப் பற்றி பார்க்கலாம்.

முதலாம் நூற்றாண்டிலே கிறிஸ்துவின் சபை என்பது மிகவும் பலமாக விருத்தியடைந்தது. அக்காலத்திலே ஏரோது இராஜா சபையிலே சிலரை துன்பப்படுத்த துவங்கினான். யோவானுடைய சகோதரன் யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலை செய்தான். அது யூதருக்கு பிரியமாய் இருந்ததென்று கண்டு. பேதுருவையும் பிடித்து கொல்ல விரும்பினான்.



ஆகையால் பேதுரு அண்ணாவை பிடித்து என்ன செய்தார்கள் தெரியுமா? மறுநாள் கொலை செய்ய சிறையில் அடைத்து வைத்துவிட்டார்கள். பேதுருவை நான்கு பேர் உள்ள நான்கு காவலில் உள்ளே சங்கிலியால் கட்டி சிறையில் வைத்தார்கள். அதாவது 16 போர் சேவகர்கள் பேதுவை கண்காணித்துக் கொண்டிருந்தனர். இதனை கண்ட சபை மக்கள் மிகவும் துக்கமடைந்தனர்.

ஏனெனில், யாக்கோபை இழந்த நிலையில், பேதுருவையும் இழக்க போகின்றோமே என்ற கவலை. ஆயினும் அந்த கவலையை, பாரத்தை தேவனிடம் சொல்லி சபை மக்கள் அனைவரும் பேதுருவிற்காக அதிக பாரத்தோடே ஜெபித்தார்கள். ஏரோது பேதுருவை வெளியே கொண்டுவரும் நாளுக்கு முந்தைய தின இராத்திரியிலே பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே உறங்கிக் கொண்டிருந்தான்.

அப்பொழுது கர்த்தருடைய தூதன் அவனுக்கு முன்பாக வந்து நின்றான் அறையிலே வெளிச்சம் பிரகாசித்து. அவன் பேதுருவை விலாவிலே தட்டி, சீக்கிரமாய் எழுந்திரு என்று எழுப்பினான். உடனே சங்கிலிகள் அவன் கைகளில் இருந்து விழுந்தன.

தூதன் பேதுருவிடம் உன் அரையைக் கட்டி, உன் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள் என்றான். அவன் அந்தப்படியே செய்தான். தூதன் பின்னும் அவனை நோக்கி: உன் வஸ்திரத்தைப்போர்த்துக் கொண்டு என் பின்னே வா என்றான். பேதுரு தூதன் சொன்ன படியே செய்து, அவர் பின்னே சென்றான்.

ஆயினும் தூதனால் செய்யப்பட்டது மெய்யென்று அறியாமல், தான் ஒரு தரிசனம் காண்கிறதாக நினைத்தான். அவர்கள் முதலாம் காவலையும் இரண்டாம் காவலையும் கடந்து, நகரத்திற்குப் போகிற இரும்புக்கதவண்டையிலே வந்தபோது, அது தானாய் அவர்களுக்குத் திறவுண்டது. அதின் வழியாய் அவர்கள் புறப்பட்டு ஒரு வீதி நெடுக நடந்துபோனார்கள்; உடனே தூதன் பேதுருவை விட்டுபோய்விட்டான். அப்பொழுதான் பேதுருவுக்குத் தெளிவு வந்தது.

ஏரோதின் கைக்கும், யூதஜனங்களின் எண்ணங்களுக்கும், என்னை விடுதலையாக்கும் படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று அறிந்துக்கொண்டான். பிறகு ஜெபம் பண்ணிக் கொண்டிருந்த சபையாரை சென்று சந்தித்து தனக்கு கர்த்தர் செய்ததை அறிவித்தான்.

பிள்ளைகளா நீங்களும் உங்களை கடிந்துக்கொண்டு போதித்து, புத்திசொல்லி வசத்தின்படி கர்த்தருக்குள் வழி நடத்துகின்ற ஊழியக்காரருக்காகவும், மூப்பர்களுக்காகவும், போதகர்களுக்காகவும் ஜெபியுங்கள். ஏனெனில் தேவ தயவு எல்லாருக்கும் தேவை. ஜெபிப்பீர்களா! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்,

**மனப்பாட வசனம்; சங்கீதம் 141:5**

''நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்துகொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெயைப்போலிருக்கும்; என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை; அவர்கள் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம்பண்ணுவேன்."

– அன்புசுதாஸ்

# கருத்தாக ஜெபித்த எலியா

சிறுவர் பகுதி

பிரியமான குட்டி செல்லங்கள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால், அக்காவின் அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாதம் எலியா என்பவரிடமிருந்து ஒரு மிகச்சிறந்த காரியத்தை கற்றுக்கொள்ளலாமா?


எலியா என்பவர் ஒரு தீர்க்கதரிசி. தீர்க்கதரிசி என்றால் கடவுளுடைய வார்த்தைகளைகளை மக்களுக்கு சொல்பவர்கள். இவர் இஸ்ரவேல் நாட்டு மக்களுக்கு தேவனுடைய வார்த்தையை சொல்பவராக இருந்தார். எலியா என்றால் "கர்த்தர் (யெகோவா) என்

கடவுள்" என்று பொருள். இந்த எலியா தீர்க்கத்தரிசி கடவுளுக்கு பயந்து, நேர்மையாகவும் தூய்மையாகவும் வாழ்பராக இருந்தார்.

இஸ்ரவேல் நாட்டின் ராஜாவாகிய ஆகாப் என்பவரும் இஸ்ரவேல் மக்கள் அனைவரும் சிலைவழிபாடு என்னும் மகா கொடிய பாவத்தை செய்தார்கள். இதனால் எலியா ஆகாபிடம் சென்று நீங்கள் செய்த பாவத்தினால், இந்த நாட்டில் மேல் மழையும் பனியும் பெய்யாது என்று கர்த்தருடைய ஜீவனை கொண்டு செல்கிறேன் என்று சொன்னார். மழை பெய்யாதபடி எலியா கருத்தாக, கவனமாக, உறுதியாக ஜெபம் ஜெய்தார். கர்த்தர் எலியாவின் ஜெபத்தை கேட்டு 3 வருடமும் ஆறுமாத காலமும் இஸ்ரவேல் நாட்டில் பனியும் மழையும் பெய்யாவிடவில்லை.

இதனால் நாட்டில் பஞ்சம் மிகவும் கொடிதாக இருந்தது. அதனால் ஆகாப் கோபமடைந்தான். பிறகு கர்த்தர் எலியாவை கூப்பிட்டு, ஆகாபை போய் சந்தி என்று சொன்னார். எலிபா ஆகாபை சந்தித்து அவனுக்கும், இஸ்ரவேல் மக்களுக்கும் முன்பாக கர்த்தரே மெய்யான தெய்வம் என்பதை ஒரு மாபெரும் அற்புத பலியின் மூலமாக செய்து காண்பித்தார். பாகலின் தீர்க்கத்தரிசிகளும், ராஜாவும் வெட்கப்பட்டு போயினர்.

மேலும், எலியா பஞ்சத்தினால் மக்கள் அழியாதபடி நான் கர்த்தரை நோக்கி ஜெபம் செய்வேன். மழை பெய்யும் என்று உறுதியாக சொல்லி, மீண்டும் எலியா தேவனை நோக்கி மழை பெய்யும்படி ஜெபம் செய்தார். கர்த்தர் தேசத்தில் மழை பெய்யும்படி கட்டளையிட்டார். மழை பெய்தது, ராஜாவும் ஜனங்கள் அனைவரும் கர்த்தரே தெய்வம் என்ற தாழவிழுந்து வணங்கினார்கள்.



பார்த்தீங்களா குட்டீஸ்! நாமும் கருத்தாக அதாவது தேவன் செய்வார் என்று நம்பிக்கையுடன், உறுதியாக, சரியானதிற்காக ஜெபிக்கும் போது, தேவன் நம்முடைய ஜெபத்திற்கும் பதிலளிப்பார். எல்லாம் வல்ல தேவன் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார். நாம் ஜெபிப்பதை விட்டுவிட வேண்டாம்.

**மனப்பாடவசனம் : யாக்கோபு 5:17–18** "எலியா என்பவன் நம்மைப்போலப்பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழை பெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம் பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. மறுபடியும் ஜெபம் பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது."

**– பிரியா ஆண்டனி**

# சோர்ந்து போகாமல் ஜெபிப்போம்

**சிறுவர் பகுதி**

அன்பான செல்லப்பிள்ளைகள் யாவரையும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன் மற்றும் உங்களுக்காக ஜெபிக்கிறோம். நாம் இந்த மாதம் ஆண்டவர் இயேசு ஜெபத்தை பற்றி சொன்ன ஒரு உவமையை குறித்து தியானம் செய்வோமா?



ஒரு ஊரிலே ஒரு நியாயதிபதி இருந்தான் நியாதிபதி அல்லது நீதிபதி என்பவர்கள் மக்களை கடவுளின் சட்டப்படி வழிநடத்துகிறவர்கள் யூதர்களிடத்தில் இது மிகவும் கனத்திற்குரிய ஒரு வேலையாகும். அவர்கள் கடவுளின் சட்டப்படி மக்களை நடத்துவதால் கடவுளின் தூதர்களை போல இஸ்ரவேல் மக்களால் பார்க்கப்பட்டனர். ஆனால் இந்த நியாதிபதி தேவனுக்குப் பயப்படாமல், மனுஷரை மதியாதவனுமாயிருந்தான்.

அந்தப் பட்டணத்திலே ஒரு விதவையும் இருந்தாள்; அவள் அவனிடத்தில் போய்: எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயம் செய்ய வேண்டும் என்று விண்ணப்பம் பண்ணினாள். வெகுநாள்வரைக்கும் அந்த நியாதிபதிக்கு மனதே வரவில்லை. இவளும் எப்பொழுதும் போய் அந்த நியாயாதிபதினிடத்தில் கேட்டுக்கொண்டே இருந்தாள்.

ஒருநாள் அந்த நியாயாதிபதி, நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் இருந்தும், இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிபடியினால், இவள் அடிக்கடி வந்து என்னை தொந்தரவு செய்யாதபடி இவளுக்கு நியாயம் செய்ய வேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

பின்னும் ஆண்டவர் இயேசு மக்களை நோக்கி; அநீதியுள்ள அந்த நியாயதிபதி சொன்னதைச்

சிந்தித்துப்பாருங்கள். அநியாயம் செய்கிற அவனே தன்னிடத்தில் தொடர்ந்து கேட்டாள் என்பதற்காக அந்த விதவைக்கு நியாயம் செய்ய விரும்பினால். நீதியுள்ள தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் ஜெபிக்கிறவர்களாகிய, தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என சொன்னார்.

ஆகையால் செல்லபிள்ளைகளா! எந்த காரணத்தை கொண்டும் ஜெபிக்காமல் இருந்துவிடாதீங்க. தேவன் நம்முடைய ஜெபத்தை கேட்டு நிச்சயம் நியாயம் செய்வார், ஆகையால் சோர்ந்துப் போகாமல் ஜெபிப்போம்.

**மனப்பாடவசனம் : கொலோ 4:2** "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபததில் விழித்திருங்கள்"

– பெவர்லி கிங்ஸ்லி

# நெகேமியாவின் ஜெப வாழ்வு

சிறுவர் பகுதி

ஹாய் குட்டீஸ்! ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். கர்த்தருடைய கிருபையினால் நீங்கள் சுகமாகவும் பாதுகாப்பாகவும் இருக்கின்றீர்கள் என நம்புகிறேன். இந்த மாதம் நெகேமியா என்பவரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான காரியத்தினை குறித்து தெரிந்துக்கொள்ளலாமா?

அர்த்தஷ்டா என்ற பெர்சிய ராஜா உலகத்தையே ஆண்ட நாட்களில், அவருடைய சூசான்



அரண்மனையில் அரசனுக்கு திராட்சை ரசம் பரிமாறுகின்ற வேலை செய்தார் நெகேமியா. இவர் ஒரு யூதர். நெகேமியா என்றால் "கர்த்தரே எனக்கு ஆறுதல்" என்று பொருள். ஒருமுறை நெகேமியாவை பார்பதற்காக அவருடைய சகோதரன் ஆனனி என்பவரும் அவருடன் சிலரும் வந்தார்கள். அவர்கள் வந்து எருசலேமின் மதில்கள் இடிக்கப்பட்டு, அதின் வாசல்கள் நெருப்பினால் சுட்டெரிக்கப்பட்டும் கிடக்கிறது என்றார்கள்.

இதை கேட்ட நெகேமியா மிகவும் அழுது, துக்கபட்டு, உபாவசித்து, பரலோக கடவுளை நோக்கி ஜெபம் செய்தார். ராஜாவிற்கு திராட்சை ரசம் பரிமாறுகின்ற போது, ராஜா நெகெமியாவின் முகம் வாடியிருக்கிறதை கண்டு, உன் மனதில் என்ன குறை சொல்லு என்றார். உடனே நெகேமியா ஜெபம் செய்துவிட்டு, ராஜாவிடம், தனது ஊருக்கும், யூதர்களுக்கும் நிகழ்ந்ததை சொன்னார். அதை கேட்ட ராஜா, அதை போய் நீ சரிசெய்ய என்ன செலவாகும்; எவ்வளவு நாட்கள் ஆகும் என கேட்டு உதவினார்.

ராஜாவின் உத்தரவுடன் நெகேமியா எருசலேமிற்கு வந்து, மக்களை ஒன்று சேர்த்து அந்த மிகப்பெரிய வேலையை செய்தார். அதை தடுக்க எதிரிகள் வந்த போதும், ஜெபத்துடன் செய்து முடித்தார். எந்த ஒரு செயலை செய்யும் முன்பு ஜெபித்துவிட்டு செய்கின்ற பழக்கம் நெகேமியாவிற்கு இருந்தபடியினால், அவர் தேவகிருபையால் வெற்றிபெற்றார்.

குட்டீஸ்! நாமும் நெகேமியாவைப் போல எந்த ஒரு காரியத்தையும் செய்யும் முன்பு ஜெபம் செய்து, தேவனுடைய ஒத்தாசை பெற்று செய்வோம். அப்பொழுது நாமும் நிச்சயமாக வெற்றிபெறுவோம்.

**மனப்பாட வசனம் : சங்கீதம் 37:5** "உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்."

– குயினி பிரதீப்

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. S. கனிஷ்கா – கரூர்
2. S. லக்ஷிதா – கரூர்
3. M. ஜோனத்தான் – கரூர்
4. M. ராஜா – கரூர்
5. A. கார்பஸ் பிலேமோன் – மதுரை
6. A. ஹானா ஜோதி – மதுரை

## சிறுவருக்கான கேள்விகள்

1. சபையார் யாருக்காக ஜெபித்தனர்?
2. எலியா ஜெபித்த போது என்ன பெய்யவில்லை?
3. எலியா ஜெபித்த போது என்ன பெய்தது?
4. இரவும் பகலும் தம்மை நோக்கி ஜெபிக்கிறவர்களுக்கு என்ன செய்வார்?
5. நெகேமியா எந்த செயலையும் செய்யும் முன்பு என்ன செய்வார்?

# அக்டோபர் மாத கேள்விகள்

1. நீதிபரராயிருக்கிற கிறிஸ்து நமக்கு பிதாவினிடத்தில் செய்வது என்ன?

2. 'தூளும் சாம்பலுமான அடியேன், ஆண்டவரோடு பேசத்துணிந்தேன்' என வாசிப்பதெங்கே?

3. ஒன்றுக்கும் கவலைபடாமல் எல்லாவற்றையும் குறித்து என்ன செய்ய வேண்டும்?

4. கர்த்தருடைய செவிகள் எதற்கு கவனமாயிருப்பதாக என்று பேதுரு கூறுகிறார்?

5. எல்லா மனுஷருக்காகவும் என்ன செய்ய வேண்டும் என பவுல் தீமோத்தேயுவிற்கு கூறுகிறார்?

6. இயேசு மலையின் மேல் தேவனை நோக்கி எவ்வளவு நேரம் ஜெபித்தார்?

7. அதிகாலையில் இருட்டோடே எழுந்து வனாந்திரமான இடத்தில் ஜெபித்தது யார்?

8. மாம்சத்திலிருந்த நாட்களில் ஜெபித்த விதத்தைப் பற்றி எபிரேய ஆசிரியர் கூறுவது என்ன?

9. அந்தி சந்தி மத்தியான வேலைகளில் நான் முறையிடுவேன் என்றது யார்?

10. யாக்கோபு, விசுவாசமுள்ள ஜெபம் என்ன செய்யும் என்கிறார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-11-2020**

அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. **பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

## சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. ஏசாயா 59:2 | 6. பிலிப்பியர் 4:6-7 |
| 2. ஏசாயா 1:16,17 | 7. எரேமியா 29:11 |
| 3. மத்தேயு 5:9 | 8. நீதிமொழிகள் 14:16 |
| 4. ரோமர் 12:18 | 9. யோவான் 14:27 |
| 5. யாக்கோபு 3:18 | 10. கொலே 3:15 |

## சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. திருமதி. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
2. திருமதி. செல்லத்தாய் சுவாமி – மதுரை
3. திரு. முத்துக்குமரன் – கரூர்
4. திருமதி. ராணி குமரன் – கரூர்
5. திருமதி. ஜெனி ஈஸ்வரி – கரூர்
6. திருமதி. ஹெல்ஸ் ஆல்பர்ட் – நெல்லை
7. திருமதி. ஜெயமணி ஜெயபாண்டியன் - கடலூர்
8. திருமதி. வைலட் கிறிஸ்டோபர் - தளவாய்புரம்
9. திருமதி. ஏஞ்சலம்மாள் – மதுரை
10. திரு. விஜய் – மதுரை
11. திருமதி. ஹெலன் திலக் – மதுரை
12. திரு. சாமுவேல் – தூத்துக்குடி
13. திருமதி. தெல்மா ஸ்டான்லி – மதுரை
14. திரு. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
15. திருமதி. ரோஸ்மேரி – சென்னை
16. திருமதி. பிரேமலதா சுந்தர்பாபு - செங்கல்பட்டு
17. திருமதி. மேரிராஜ் – மதுரை
18. திருமதி. பெரில் பாஸ்கர்– படப்பை
19. திருமதி. ஹெப்ஸிபா தாமஸ் – படப்பை
20. திருமதி. பியூலா ஜேசுராஜன் – புதுவை
21. T. மேரி சுமதி – திருச்சி
22. திரு. R.P. டேவிட் – ஏற்காடு
23. திரு. டெய்சி சாந்தகுமார் – தென்காசி
24. திரு. டேவிட் சாந்தகுமார் – தென்காசி
25. திருமதி. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
26. திருமதி. காந்தா மனோகரன் – திருச்சி
27. திருமதி. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
28. Dr. D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
29. திருமதி. ஞானசிரோன்மணி – சமயநல்லூர்
30. திரு. D.I. அன்பு சுதந்திரம் – ஏர்வாடி
31. திருமதி. மெர்ஸி ஸ்டான்லி – கோவை
32. P. சமாதானம் பீட்டர் – விருதுநகர்

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2018 - 2020
Date of Publication : 8th October 2020
Posted at Arasaradi HPO on 10th 11th October 2020

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்




அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்



## கைபிரதிகள்



உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH







AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI
45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To